செய்தி வெளியீடு எண்.57/2017 நாள்:26.09.2017

<u>சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்</u>

# குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியையும், குடிநீர் கட்டணங்களையும் மேல்வரி இல்லாமல் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு செலுத்த கடைசி நாள் 30.09.2017 ஆகும்.

- கடைசி நேர நெரிசல்களையும் / இடர்பாடுகளையும் தவிர்த்திட வரியையும், கட்டணங்களையும் உடனே செலுத்தும்படி நுகர்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- காலதாமதமாக செலுத்தப்படும் கட்டணங்களுக்கு மேல் வரி மாதம் 1.25 சதவீதம் செலுத்த நேரிடும்.
- சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளை சேர்ந்தவர்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி மற்றும் கட்டணத்தை செலுத்த வேண்டும். குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்பு இல்லாதவர்களும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி செலுத்தக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.
- சென்னை நகரின் எல்லைக்குள் எப்பகுதியில் கட்டடம் இருந்தாலும் வரியையும், கட்டணங்களையும், சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்திலும்/பகுதி அலுவலகங்களிலும் அல்லது பணிமனை வசூல் மையங்களிலும் அல்லது இணையதளத்தின் வாயிலாக வாரியத்தின் வலைதள முகவரி www.chennaimetrowater.tn.nic.in மூலமாகவும் பற்று / வரவு வங்கி அட்டை உபயோகப்படுத்தியும் செலுத்தலாம்.
- நிலுவைத்தொகையை செலுத்த தவறினால் சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகளை துண்டிக்க நடவடிக்கை எடுக்கும். மேலும் நிலுவைத் தொகையை வசூல் செய்ய வருவாய் வசூல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்